தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - 2015

**P103** இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. வசனம் என்ற வடமொழிச் சொல் தமிழில் எவற்றைக் குறிக்கிறது?
2. “காந்தியக் கவிஞர்” என்று அழைக்கப்படுபவர் யார்?
3. கவிதையின் இருவகைகள் யாவை?
4. கண்ணதாசனின் இயற்பெயர் என்ன?
5. “நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா” என்று பாவேந்தர் யாரைக் குறிப்பிடுகிறார்?
6. புதுக்கவிதையின் தந்தை எனப் போற்றப்படுகிறவர் யார்?
7. கிறித்துவ சமயம் சார்ந்த கலம்பக நூல் எது?
8. திருமால் எந்த அவதாரம் எடுத்து மாவலியை அடக்கினார்?
9. கோவை இலக்கியம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
10. கைக்கிளை – என்பது என்ன?
11. தமிழில் தோன்றிய முதல் சதக இலக்கியம் எது?
12. பாவேந்தர் பிள்ளைத்தமிழின் ஆசிரியர் யார்?
13. “இயற்கையை உடலாகக் கொண்டவன்” யார்?
14. பக்திப் பாடல்களை மனப்பாடம் செய்ய எந்த இலக்கியம் ஏற்றதாக இருந்தது?
15. உறுதிப்பொருள் நான்கினைக் கூறுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. உரைநடை - விளக்கம் தருக.
2. புதுக்கவிதையின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
3. சிற்பியின் படைப்புகளைக் குறிப்பிடுக.
4. மடல் ஏறுவதற்கான காரணம் யாது?
5. திருக்காவலூர்க் கலம்பகத்தில் திருமாலின் பெருமைகளாக தலைவி கூறுவன யாவை?
6. உவமை அணியை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
7. கவிமணியின் படைப்புகளில் பாடுபொருள் யாது?
8. தலைவி தமிழிடம் தூது வேண்டியது யாது?

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண் விடுதலைச் சிந்தனைகளைப் பாரதியார் எவ்வாறு விரித்துரைக்கிறார்?

2. (அ) உழைப்பின் மேன்மைக் குறித்து முடியரசன் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) பாவேந்தரின் பொதுவுடைமைச் சிந்தனைகளை விளக்குக.

3. (அ) மக்களிடையே இறையுணர்வைத் தோற்றுவிக்கத் தோன்றிய சிற்றிலக்கிய வகைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பிள்ளைத்தமிழ் இலக்கிய வரலாறு பற்றி விவரிக்க.

❋❋ ❋